**மா. சந்திரசேகரன், இ.ஆ.ப.,**
பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும்
பேரூராட்சிகளின் ஆய்வாளர்

கைபேசி : 9445588588
நேரடி : 2534 0352
நிகரி : 2535 2301
மின்னஞ்சல் : dtp@tn.nic.in

குறளகம், சென்னை – 108

ந.மு.க.எண். 7354/2012/உ4 நாள். 05.07.2012

அன்புடையீர், வணக்கம்.

பொருள்– பேரூராட்சிகள் நிர்வாகம்–மெலிதான பிளாஸ்டிக் பைகள் உபயோகிப்பதை தவிர்த்தல்–தொடர்பாக

---

மக்கள் தொகை பெருக்கம் மற்றும் நுகர்வோர் கலாச்சாரத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் காரணமாக நகர்ப்புரங்களில் உருவாகும் திடக்கழிவுகளின் தன்மை மற்றும் அளவு அதிகரித்தும், மாறுபட்டும் வருகிறது. உங்கள் பேரூராட்சிகளில் சேகரமாகும் மொத்த திடக்கழிவுகளில் சராசரியாக சுமார் 7 சதவீதம் பிளாஸ்டிக் கழிவுகளாக இருக்கிறது. பிளாஸ்டிக் பொருட்கள் குறிப்பாக 40 மைக்ரான் வரை தடிமன் உள்ள பிளாஸ்டிக் பைகள் சுற்றுச்சூழலுக்கு மிகுந்த அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. அவற்றின் மக்காத தன்மை காரணமாக, அவற்றை நிலத்தில் புதைத்து வைப்பதில் பிரச்சனை ஏற்படுகிறது. நிலத்தில் புதைத்து வைக்காமல் சேகரித்து வைத்தால் அவற்றின் மெலிதான தன்மை காரணமாக காற்றில் பறந்து எங்கும் பரவிக் கிடப்பதால் பேரூராட்சிகள் சுத்தமற்ற முறையில் தோற்றமளிக்கின்றன. அவற்றை எரிப்பதால் மனிதர்களின் உடல்நலத்தை பாதிக்கும் விஷ வாயுக்கள் தோன்றுகின்றன. சில சமயம் கால்நடைகள் இவற்றை உண்டு விடுவதால் அவை இறக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்படுகின்றன. சூடான பொருட்களை இவ்விதமான பைகளில் பொட்டலமிடுவதால், இவ்வுணவுப் பொருட்கள் நச்சுத் தன்மை அடைகின்றன. அதன் மூலம் மக்களுக்கு உடல்நலக் குறைபாடுகள் தோன்றுகின்றன. இவ்விதம் பல்வேறு தீங்குகளை விளைவிக்கும் மென்மையான பிளாடிக் பைகளை பயன்படுத்தாமல் இருப்பது ஒன்று தான் இவற்றிற்கு எதிரான சிறந்த நடவடிக்கையாகும். இதற்கு பிளாஸ்டிக்குக்கு மாற்றுப் பொருட்களை பயன்படுத்துவதை நாம் ஊக்கப்படுத்த வேண்டும்.

பிளாஸ்டிக் கழிவுகளின் பெருக்கத்தால் உள்ளாட்சி நிர்வாகம் உள்ளிட்ட தொடர்புடைய பிற துறைகளுக்கு புதிய சாவல்களும், கூடுதல் சுமைகளும் ஏற்படுகின்றன. எனவே, அனைத்து பேரூராட்சிகளிலும் மெல்லிய பிளாஸ்டிக் பைகளை அறவே பயன்படுத்தாத நிலையை உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ளன. அரசின் இந்த நோக்கம் முழுமையாக வெற்றியடைய பேரூராட்சி மன்றங்களின் முதன்மையான ஒத்துழைப்பு மிகவும் அவசியம். இந்த வகையில் முதற்படியாக பேரூராட்சிகள் இதற்கென சிறப்புக் கூட்டம் நடத்தி ஒரு தீர்மானம் இயற்றக் கேட்டுக் கொள்கிறேன். தீர்மானம் இயற்றுவது முதல் தொடர்ச்சியாக எடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளிலும், நீங்கள் முக்கிய பங்கு வகித்து பணியாற்றக் கேட்டுக் கொள்கிறேன். தங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பினைத் தர செயல் அலுவலர் மற்றும் உதவி இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், http://moef.nic.in என்ற வலைதளத்தில் பிளாஸ்டிக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதி 2011 குறித்த விவரஙகள் உள்ளன அவற்றை பயன்படுத்தி பிளாஸ்டிக் கழிவுகளற்ற பேரூராட்சிகளை உருவாக்கிடக் கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்த்துக்கள்.

தஙகள் அன்புள்ள

(மா.சந்திரசேகரன்)
பேரூராட்சிகளின் இயக்குநர்
மற்றும் ஆய்வாளர்

இணைப்பு – படிவம் 1

பெறுநர்
திரு.
தலைவர்,
…………………… பேரூராட்சி,
…………………… மாவட்டம்.

நகல்

அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள்.

**இணைப்பு**

**<u>பிளாஸ்டிக் ஒழிப்பு நடவடிக்கைகள்</u>**

**<u>கால அட்டவணை</u>**

| | |
|---|---|
| 16.07.2012 | அனைத்து பேரூராட்சிகளிலும் பிளாஸ்டிக் கழிவுகளை முற்றிலும் ஒழிப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றுதல். |
| 23.07.2012 | சிறுவியாபாரிகள், தெரு வியாபாரிகள், பூக்கடைகாரர்கள், காய்கறி கடைக்காரர்கள், திருமண மண்டப உரிமையாளர்கள் ஆகியேருடன் பிளாஸ்டிக் கழிவுகளை ஒழித்திட விழிப்புணர்வு கூட்டம் நடத்துதல். |
| 30.07.2012 | சுய உதவிக் குழு பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு எதிராக தீர்மானம் இயற்றல் |
| 1.08.2012 | மாணவ மாணவியரிடையே பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஒவியப்போட்டி மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல |
| 06.08.2012 | ஒவ்வொரு வார்டிலும் பேரணி, மனித சங்கிலி, தெருமுனை நாடகங்கள்நடத்துதல். |
| 07.08.2012 முதல் 14.08.2012 வரை | FM ரோடியோ, உள்ளூர் தொலைக்காட்சிகள், செய்தித் தாள்களில் செய்தி வெளிவர செய்தல் மற்றும் பொது மக்கள் பெரும் அளவில் கூடும் இடங்களில் விளம்பர பலகைகள் வைத்தல் |
| 15.08.2012 | மெலிதான (40 micron வரை தடிமனுள்ள) பிளாஸ்டிக்கை பயன்படுத்தாத நிலையை அடைதல். |
| 16.08.2012 முதல் 14.09.2012 வரை | மேற்படி நிலையினை தொடர் கண்காணித்தல் மற்றும் சட்டப்படியான நடவடிக்கை எடுத்தல். |
| 15.09.2012 | பிளாஸ்டிக் கழிவுகள் இல்லாத பேரூராட்சி என அறிவித்தல். |